தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தர்பூசணி

சமீபத்தில் தர்பூசணி பழங்களில் செயற்கையாக நிறமிகளை ஊசி மூலம் செலுத்தி சிவப்பு வண்ணத்தை மிகுதியாக இருக்குமாறு ஒரு சில வியாபாரிகள் கடைபிடிக்கிறார்கள் என சில ஊடகங்களில் பரவலாக செய்திகள் வருகின்றன. இதனால் பொதுமக்கள் தர்பூசணி பழங்களை தவிர்க்க நினைப்பது சாத்தியமே. ஆனால் பொதுவாக வெளிப்புறத்திலிருந்து ஊசிகள் மூலம் சாய கரைசல் பழங்களினுள் செலுத்தி பரவலாக்குவது கடினம். செடிகள் பொதுவாக திட கரைசல்களை சிறப்பு திசுக்கள் மூலமாகவே பல பாகங்களுக்கு கடத்துகின்றன. அறுவடை செய்த பழங்களில் இவ்வாறு நிறமிகளை ஊசி மூலம் செலுத்தி நிறமிகளை பரவ செய்வதற்கான சாத்தியம் குறைவு. எனவே, பொதுமக்கள் தவறான வதந்திகளால் தர்பூசணி பழங்களை தவிர்க்க தேவையில்லை.

## வாழை

இதே போன்று சமீபத்தில் ஒரு சில ஊடகங்களில் மஞ்சள் நிறமுடைய சீராக பழுக்க வைக்கப்பட்ட வாழைப் பழங்களை மரபணு மாற்றம் மூலம் உருவாக்கப்பட்ட வாழைகள் என்று சிலர் தவறுதலாக குறிப்பிடுகின்றனர். சற்றே குளிர்ந்த குளிர் ஊட்டப்பட்ட பதன அறையில் விஞ்ஞான ரீதியில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பமான எத்திலின் வாயுவை சரியான அளவில் சரியான காற்று ஈரப்பதத்தில் இப்பழங்கள் பழுக்க வைக்கப்படுகின்றன. இதனால் மிகவும் நேர்த்தியான முறையில் பழங்கள் பழுத்து நல்ல தரமான மஞ்சள் வண்ணம் நிறமுடைய பழங்கள் சந்தைக்கு வருகின்றன. இது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல மேலை நாடுகளிலும் சந்தையில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட, உடலுக்குத் தீங்கு விளைவிக்காத தொழில் நுட்பமாகும். மேலும், மரபணு மாற்றம் மூலம் உருவாக்கப்பட்ட வாழை இரகங்கள் இந்தியாவில் மற்றும் குறிப்பாக தமிழகத்தில் பயிர் செய்யப்படுவது இல்லை. எனவே, பொதுமக்கள் இதனை கவனத்தில் கொண்டு வாழைப் பழங்களை உண்பதற்கு தயக்கம் காட்ட வேண்டாம்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்